**இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு - 2015**

---

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநரை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி தற்போது பாவனைக்கு எடுக்கப்படுகின்ற போதிலும் முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 18,492,638 கிரயமான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து நியாயப் பெறுமதியைக் கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றைத் தயாரிக்கும் போது அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற மூலதன மானியம் மற்றும் அதற்குரிய சீராக்கங்களை வெளிப்படுத்தும் வகையில் மானியம் கணக்கொன்று பேணப்படாதிருந்ததுடன் மூலதன மானியங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல.835(1)(இ) இன் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரமின்றியும் 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பிரிவின் படியும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் அலுவலகத்திற்காக கட்டிடமொன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் படி அந்தக் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூபா 425,500 ஆக இருந்த போதிலும் ரூபா 525,000 வீதம் 02 மாத வாடகை வைப்பும் முற்பணமாக 06 மாத வாடகையும் உள்ளடக்கி 2014 நவம்பர் 17 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 11,933,794 கூட்டுத்தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் அங்கீகாரமின்றி 2014 ஆம் ஆண்டில் உடைந்த பொருட்களை அகற்றுதல் மற்றும் ஏலவிற்பனைக்காக குழுவொன்று பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் குழுவினால் கைதவிர்க்கப்படாத 22 அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டின்போது பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றுதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கை நிதி விளைவுகள் ரூபா 3,576,072 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,921,459 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,654,613 இனால் அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 4,308,512 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 2,580,276 இனாலும் நிர்வாகச் செலவினம் ரூபா 2,975,350 இனாலும் அதிகரித்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பு தொடர்பில் பிரதான தாக்கமளித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டினை தவிர 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் வேதனங்கள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தும் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பங்களிப்பில் தொடர்ச்சியான முன்னேற்றத்தைக் காட்டியது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் படி ஆணைக்குழுவின் தொழிற்படு மூலதன விகிதப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2015 ஆம் ஆண்டு | 2014 ஆம் ஆண்டு |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 12.6:1 | 32:1 |
| நிதி விகிதம் | 9.8:1 | 21:1 |

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நடைமுறை விகிதமும் நிதி விகிதமும் குறைவைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பந்தியின் குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அதிகாரம் மற்றும் நோக்கங்களுக்கிடையே நிறைவேற்றப்படாத பணிகள் மற்றும் போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள் பின்வருமாறு இருந்தது.

(அ) புத்தாக்கங்களைப் பரீட்சித்தன் பின்னர் புத்தாக்குநர்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்குதல் மற்றும் காப்புரிமை அனுமதிப்பதிரம் வழங்குவதற்காக விண்ணப்பத்திரம் தயாரிப்பதற்கு உதவி வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காப்புரிமை பெற்றுக் கொள்வதற்காக புத்தாக்குநர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) புத்தாக்கங்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்வதற்காக புத்தாக்குநர்களுக்கு உதவி வழங்குதல் ஆணைக்குழுவின் பணியொன்றாகும். எவ்வாறாயினும் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 468 புத்தாக்கங்கள் வெற்றியீட்டியுள்ள போது 437 புத்தாக்கங்கள் தொடர்பாக காப்புரிமை அனுமதிப்பத்திரம் வழங்கி வர்த்தகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்தல், பூரணப்படுத்துதல் மற்றும் உற்பத்தி செய்வதற்காக ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் புத்தாக்குநர்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆணைக்குழுவின் பணியாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு புத்தாக்குநர்களின் நிதியத்தில் ரூபா 9,793,495 மீதியொன்று காணப்பட்டிருந்தும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி ரூபா 8,000,000 கடன் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் போது ரூபா 400,000 கடன்தொகை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) புத்தாக்குநர்களின் புத்தாக்கங்கள் மற்றும் பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்கு பொதுவான பரிசோதனைக் கூடமொன்று தாபித்து பேணப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் ஆரம்பம் முதல் இது வரையிலும் அந்த பரிசோதனைக் கூடத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கையின் இளைஞர்களுக்கிடையே புத்தாக்கத் திறனை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கு தைரியமளிப்பதற்காக பாடசாலைகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆக்கதிறனான சங்கங்களை அமைத்தல் ஆணைக்குழுவின் பணியாக இருந்த போதிலும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கதிறனான சங்கங்கள் அமைக்கப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட வில்லை.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 24 ஆகவும் உள்ளபடியான பதவியணியின் 20 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 1979 இன் 53 ஆம் இலக்க புத்தாக்குநர்களை ஊக்குவித்தல் அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பந்தியில் ஆணைக்குழுவினால் நிறைவேற்ற வேண்டிய 12 செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் போதியளவில் காணப்படாமையினால் அதில் 06 செயற்பணிகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 21(1) ஆம் பந்தியின் படி ஆணைக்குழுவின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி, காப்புரிமை மற்றும் சட்டம் போன்ற பிரிவுகளை தாபிப்பதற்காக பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று

தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினாலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியாக செலவினத்துடன் ஒப்பீடு செய்தபோது 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i | நிலையான சொத்துக்கள் இனங்காணக்கூடிய வகையில் இலக்கம் இடப்படாமை. |
| | | ii | நிலையான சொத்துப் பதிவேட்டில் ஒரு சொத்து பல தடவை பதியப்பட்டமை |
| (ஆ) | பொருட்பதிவேட்டுக் கட்டுப்பாடு | | பொருட்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல்கள் உள்ளடக்கப்பட்ட பொருட்பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |